உ

**பாலு சரவண சர்மா**

*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

# கார்த்திகை தீபம் ஓர் விளக்கம்



கார்தீகை நட்சத்திரத்தின் அருகில் முழுநிலவு இருக்கும் மாதமே கார்திகை மாதம். இது போலவே முழுநிலவு எந்த நட்சத்திரத்தின் அருகில் உள்ளதோ அந்த நட்சத்திரத்தின் பெயரால் அந்த மாதம் அழைக்கப்படுகிறது

**பௌர்னமியும் மாதங்களும்**

சித்திரை, விசாகம்(வைகாசி), ஆனி(ஜேஷ்டா - கேட்டை), ஆடி (பூராடம் - ஆஷாடம்), ஆவணி(திருவோணம் - சிராவணம்), புரட்டாசி(பாத்ரபதம் - பூரட்டாதி), ஐப்பசி(ஆஸ்விஜம் - அஸ்வினி), மார்கழி(மார்கசீருஷம் - மிருகசீருடம்), தை(பௌஷ்ய - பூசம்), மாசி( மாக - மகம்), பங்குனி (பால்குன -உத்திரம்)

**பௌர்னமி கணிதம்** (பௌர்னமி திதி இருப்பு: 20.11.2010 - இரவு 22:36 முதல் 21.10.2010 - இரவு 22:56 வரை)



ஒரு திதி என்பது 12° பாகை அளவாகும். வளர்பிறை 15, தேய்பிறை 15 என மொத்தம் 30 திதிகள், ஒரு திதிக்கு 12° என 30 திதிகளுக்கு 360°

சந்திரனின் ரேகாம்சம்(Longitude) பாகையிலிருந்து சூரியனின் ரேகாம்சம் பாகை கழிக்க மீதம் வரும் 180 பாகை வரும் நாளே பௌர்னமி திதி ஆகும். கார்தீகை தீபம் அன்று காலை சந்திர(25°55′), சூரிய நிலை(214°34) அடிப்படையில் கணித்தால் (25°55′ - 214°34′ = 171°21′), இதில் சூரியனின் பாகையைவிட சந்திரனின் பாகை குறைவாக உள்ளதால் சந்திரனின் பாகையுடன் 360 சேர்த்து கணக்கிடவும்.

168° முதல் 180°வரை பௌர்னமி ஆகும் ஆதாகில் சூரியனுக்கு 180° நேர்கோணத்தில் சந்திரன் இருப்பார்

**நட்சத்திர கணிதம்** (கார்திகை இருப்பு: 21.11.2010 - காலை 06:54 முதல் 22.10.2010 - காலை 07:39 வரை)



சந்திரன் அன்று உள்ள ரேகாம்சத்தை 13°20′ல் வகுத்து எத்தனை தடவை வருகிறதோ அது அஸ்வினி முதலாக கணக்கிட்டு வரும் நட்சத்திரமாகும். மீதம் இருப்பின் கடைசி நட்சத்திரம் கடந்து அடுத்த நட்சத்திரம் நடப்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

அந்த அடிப்படையில், சந்திரன் கடந்த தூரம் 25°55′இதில் ஒரு நட்சத்திரம் 13.2 வீதம் சென்று மீதம் 12° 35′ உள்ளது அதவாது அஸ்வினி சென்று பரணி உள்ளது

பரணி நட்சத்திரம் பெருமளவு கடந்து இன்னும் 00°45′(26°40′ வரை பரணி) கலை மட்டுமே பாக்கி இருப்பதால் உதயத்தில் சில மணி நேரங்களே பரணி உள்ளது என கணக்கிடவும். 26°40′க்கு மேல் கார்திகை துவங்கி 30°00′ வரை கார்திகை நட்சத்திரம் ஆகும்

திதி, நட்சத்திரம் துவக்கம், முடிவு நேரங்களை துல்லியமாக கணிக்க இங்கு எளிதாக விளக்க இயலாது.

**பௌர்னமிகளில் சம்மந்தப்பட்ட விரதங்கள்**

தைபூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரா பௌர்னமி, வைகாசி விசாகம், ஆவணி அவிட்டம்(ஓணம்), ஐப்பசி அன்னாபிஷேகம், கார்திகை தீபம். மார்கழி ஆருத்திரா தரிசனம்.

www.prohithar.com

**அக்னி நட்சத்திரமும் கார்திகை தீபமும்**

கார்திகை நட்சத்திரத்தின் அருகில் சூரியன் பயணிக்கும் காலம் அக்னி நட்சத்திரத்தில் வரும் மிக வெப்பமான **“கத்திரி வெயில்”** காலம். அதற்கு எதிர்மறையாக கார்தீகை நட்சத்திரம் பௌர்ணமி நிலவுடன் இருக்கும் குளுமையான காலம் கார்தீகை தீபம் ஆகும். இந்த ஆண்டு உலகின் தீபமாக விளங்கும் சூரியனின் கிழமையில் வருகிறது

கிருத்திகை நட்சத்திரத்தின் அதிதேவதை அக்னி என் பது மேலும் சிறப்பான ஒரு விஷயம்.

இப்படி அக்னிக்கும் கார்திகை அதிக தொடர்பு இருப்பாதல் இந்நாளில் அக்னியை தீபத்தின் வழியாக வழிபடுவதும் மிகவும் சிறப்பானதாகும்

**பரணியில் தீ மூட்டுதல்**

பரணியும், கார்தீகையும் அக்னி சம்மந்தமுடைய நட்சத்திரங்கள் எனவேதான் கார்தீகை தீபம் அன் று முன் னாள் பரணி தீபம் ஏற்றப்படுகிறது, பரணியில் செங்கல் சூளைக்கு அக்னி இட்டு துவக்குவார்கள். உணவகங்களில் புதிய அடுப்பு மூட்டவும் பரணி நட்சத்திரமே சிறந்ததாகும்.

கார்திகை தீபத்தில் கோவில்களில் சொக்கப்பானையை அக்னிதிக்கில்(தென் கிழக்கு) திசையில் தான் ஏற்றுவார்கள்

**பௌர்னமியும் தெய்வங்களும்**

**முருகன் :**

பௌர்னமி முருகனுக்கு அதிக தொடர்புடைய நாளாகும். (சந்திர மாதம் - கார்திகை) இம்மாதத்தில் வரும் சஷ்டியில்தான் சூரசம்ஹரம் நடத்தப்படுகிறது. முருகனுக்கு பௌர்னமி சம்மந்த முடைய இதர விரதங்கள் தைபூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், ஆடிப்பூரம்



**சிவன் :**

பிறைசூடிய பித்தன் சிவன் , அனைத்து பௌர்னமிகளும் சிறப்பாக இருப்பினும் மாசிமகம், சித்திரா பௌர்னமி, ஐப்பசி அன் னாபிஷகம், மார்கழி அருத்ரா தரிசனம் போன் றவை சிவனுக்கு மிகவும் சிறப்பாக வழிபடப்படுகிறது இதல் உச்சகட்டமாக அனைத்து மக்களும் இல்லத்தில் வழிபடும் இந்த கார்தீகை பௌர்னமி தீபத்தை “**அண்ணாமலை தீபம்**” என் று வழங்கப்படுகிறது.

**புத்திரபாக்யமும் புத்திரன் கோட்டையும்**

சிவனுக்கு எத்தனை தலங்கள் இருப்பினும் ஆயிரம் ஆண்டுகள் பழமையான புத்திர பாக்யத்திற்கு என சிறப்பு தலமான புத்திரன் கோட்டை கிராமத்தில் உள்ள அகஸ்தீஸ்வர்ர் உடனுறை மூத்தாம்பிகை கோவிலில் கார்தீகை தீபம் அன் று விளக்கேற்றி வழிபட்டால் புத்திர தோஷம் நீங்கும், புத்தரர்களுக்கு நன் மை உண்டாகும்.

புத்திரன் கோட்டை கிராமம் மதுராந்தகத்தில் இருந்து பாண்டி செல்லும் வழியில் அமைந்துள்ள புனிதத்தலம் மிகபழமையான சிவாலயமாகும். தற்பொழுது இங்கு வழிபாடுகள் சிறப்பாக நடபெறுகிறது

**சிவாலயங்களில் என் று கார்திகை தீபம் ?**

சிவாலயங்களில் வழிபாட்டு முறையில் பல ஆகமங்கள் கடைபிடித்தாலும் பொதுவாக இரண்டு முறைகளில் கார்தீகைதீபம் ஏற்றப்படுகிறது

**கடலும் - மலையும்**

கடற்கரையும் அதை ஒட்டிய சிவாலயங்கள், மலை ஒட்டிய சிவாலயங்களில் பௌர்னமி திதி அன் று ஏற்றப்படும்.
உதாரணம்: திருமயிலை, திருவண்ணாமலை

**கடலும் - மலையும் சாராத பகுதிகள்**

இங்குள்ள சிவாலயங்களில் கார்திகை நட்சத்திரம் சந்திர உதயத்தில் இருக்கும் நாளே கார்தீகை தீபம் ஏற்றப்படுகிறது. உதாரணம்: தஞ்சை மாவட்ட கோவில்கள்.

www.prohithar.com

இவ்வாண்டு கார்தீகை நட்சத்திரமும், பௌர்னமியும் சந்திர உதயகாலத்தில் இருப்பதால் மேற்கண்ட இரண்டு பிரிவு சிவாலயங்களிலும் ஞாயிறு 21.11.2010 அன்று கார்தீகை தீபம் கொண்டாடப்படுகிறது. சில கோவில்களில் சம்பிரதாயம் மாறுபடும்.

**விஷ்ணு - வைணவம்**

ஒவ்வொரு பௌர்னமியும் விஷ்ணுவிற்கு சிறப்பானதாகும். இந்நாளில் சந்திரன் உதயமாகும் காலத்தில் சத்திய நாராயணா பூஜை வழிபாடு நடத்தப்படுகிறது. மிகவும் சிறப்பாக சித்திரா பௌர்னமி அன்று விஷ்ணுவிற்கு வழிபாடு நடத்தப்படுகிறது.

**வைணவ கோவில்களில் கார்தீகை தீபம் என்று ?**

வைணவ கோவில்களில் பாஞ்சாரத்திரம், வைகானாஸம் என இரண்டு ஆகமங்கள் கடைபிடிக்கப்பட்டு அதன் விதிப்படி கார்தீகை தீபம் ஏற்றப்படுகிறது

**வைகானஸ விதி:**

பௌர்னமி என்று சந்திரோதயத்தில் அதிகமாக வியாபித்துள்ளதோ அன்று கார்தீகை தீபம் ஆகும்

■ வைகானஸ ஆகமம்: ஞாயிற்றுக்கிழமை 21.11.2010

**பாஞ்சாரத்திர விதி**

கார்தீகை நட்சத்திரமே பிரதானம்

பரணி தொடர்பு இல்லாத கார்திகை நட்சத்திரம் உள்ள நாளில் கார்தீகை தீபம் ஏற்றவேண்டும்

பரணி கார்தீகையும் சேர்ந்து இருப்பின் மறுநாள் கார்தீகை தீபம் கோண்டாட வேண்டும்

தீபம் ஏற்றும் பொழுது கார்தீகை நட்சத்திரம் இல்லை என்றாலும் பரவாயில்லை பரணியின் தொடர்பு(வேதை) கண்டிப்பாக இருக்கக்கூடாது என்பது விதி

■ பஞ்சாரத்திர ஆகமம்: திங்கள் கிழமை 22.11.2010 பரணியின் வேதை(தொடர்பில்லாத) கார்திகை உள்ள நாள்

**விஷ்ணுவை தீபமாக வழிபடும் கோவில் -** விளக்கொளி பெருமாள்(தீபப்பிரகாசர், திவ்யபிரகாசர்) மரகதவல்லி தீப்பிரகாசர் திருக்கோயில், தூப்புல், காஞ்சிபுரம்-631501(சுரேஷ் அய்யங்கார் +91 99942 93004)

காஞ்சிபுரம் அருகில் அமைந்துள்ள இந்தக்கோவில் பெருமாளின் திவ்யதேசங்கள் 108ல் ஒன்று, காஞ்சிபுரம் விளக்கொளிபெருமாள் கோயில். சரஸ்வதி தேவிக்கு இத்தலத்தில் பெருமாள் காட்சி தந்துள்ளார். தர்ப்பைப்புல் வளர்ந்த பகுதியாக இருந்த காட்டில் திருமால் காட்சி தந்ததால் இப்பகுதி "தூப்புல்' எனவும் "திருத்தண்கா' எனவும் அழைக்கப்படுகிறது. ஆச்சாரியரான வேதாந்த தேசிகன் இங்கு அவதாரம் செய்ததால் அவர் "தூப்புல் வேதாந்த தேசிகன்' என அழைக்கப்பட்டார். திருமங்கை யாழ்வாரால் 2 பாசுரங்களில் இத்தலம் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

**பரணி தீபம்:**

பரணி நட்சத்திரம் தீபாரோஹண காலத்தில் இருக்கும் சனிக்கிழமை 20.11.2010 அன்று பரணிதீபம்

**இல்லத்தில் கார்தீகை தீபம்:**

இல்லத்தில் கிருத்திகை நட்சத்திரமும், பௌர்னமியும் சேரந்திருக்கும் ஞாயிற்றுக்கிழமை 21.11.2010 அன்று மாலையில் சூரியன் அஸ்தமனமாகும் முன்னர் தீபம் ஏற்றி **அருணகிரிதநாதர்** அருளிய **திருப்புகழ்** பாடி வழிபடுதல் நன்று.

**தீபம் ஏற்றும் முறை**

வீட்டில் ஐந்து அகல் தீபங்களை வீட்டின் மையத்தில் ஏற்றி அவல், நெல்பொரி, வெல்ல அடை, உப்பு அடை, வெண்ணெய் ஆகியவற்றை படைத்து, மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவனை வணங்கி வழிபட்டு பின்னர் வீட்டில் தலைவாசல், வெளிவாயில் மற்ற இடங்களில் தீபம் ஏற்ற வேண்டும்

21 நவம்பர் 1971ல் இந்திய இராணுவம் பங்களாதேஷில் புகுந்து பாகிஸ்தான் இராணுவத்தை தோற்கடித்து !

www.prohithar.com

**தீப காயத்ரி மந்திரம்**

ஓம் மங்கள ரூபாயைச வித்மஹே மாத்ரு தேவ்யைச தீமஹி
தந்நோ தீபஜோதி: ப்ரசோதயாத்

**திசை:**

தீபத்தை கிழக்கு அல்லது வடக்கு முகமாக வைத்து ஏற்ற வேண்டும்.
பஞ்சுத்திரி, நல்லெண்ணெய், களிமண்ணால் செய்யப்பட்ட அகல் கொண்டு ஏற்றவும்
மண் அகல் வாங்கி ஏழை குயவனின் ஒரு நாள் உணவிற்கு வழிசெய்யுங்கள்.

**தானம்:**

நாம் எந்த அளவு எண்ணையை விளக்கேற்ற பயன் படுத்துகிறோமோ அந்த அளவு தானம் செய்யவேண்டும்.

தமிழக கிராமங்களில் எத்தனையோ கோவில்களில் விளக்கு ஏற்ற இயலாத நிலையில் உள்ளது. அந்த கோவில்களுக்கு ஒருமாத மின் சார கட்டனத்தை செலுத்துவதால் இறைவனின் இருள்நீங்கினால் நமக்கு அருள் கிடைக்கும்.

பாழடைந்த கோவிலுக்கு சென் று தீபம் ஏற்றி கார்தீகைதீபத்தை கொண்டாடுங்கள். இறைத்தொண்டு என வாழும் கிராமத்து கோவில் ஏழை அர்ச்சகருக்கு, பூசாரிகளுக்கு வாழ உதவுங்கள். மன் னர்கள் போல் நம்மால் கட்டமுடியாது குறைந்த பட்சம் கோவிலை காப்பற்றும் அந்த ஏழை பூசாரிகளுக்கு வாழ்வளியுங்கள். இதுவும் இறைவழிபாடுதான் .



கார்தீகை தீபம் அன் று ஆதரவற்றோர் இல்லத்திற்கு தானம் செய்யுங்கள்

---

பாலு சரவண சர்மா
*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென் னை 45, பாரத நாடு
தொலைபேசி: +91 44 22261742, +91 98403 69677
மின் னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

© காப்புரிமை 16.11.2010